பாடம் 2 அக்டோபர் 4–10

# கிருபையால் உண்டான வியப்பு



ஓய்வுநாள் பிற்பகல்

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** யோசுவா 2:1–21; எண் 14:1–12; எபி 11:31; யாத் 12:13; யோசுவா 9; நெகே 7:25.

**மனன வசனம்:** விசுவாசத்தினாலே ராகாப் என்னும் வேசி வேவுகாரரைச் சமாதானத்தோடே ஏற்றுக்கொண்டு, கீழ்ப்படியாதவர்களோடேகூடச் சேதமாகாதிருந்தாள். எபி 11:31.

'மீண்டும் இப்படிச் செய்துவிட்டேனே?' என்று நினைக்காதவர்கள் நம்மில் அநேகர் இருக்கமுடியாது. பொதுவாக மனிதர்களின் வாழ்க்கையில், ஏன் நம் தனிப்பட்ட வாழ்க்கையில் இந்த வரலாற்றுக்கு பஞ்சமிருக்காது. செய்த தவறையே எத்தனைமுறை மீண்டும் செய்துவிடுகிறோம்!

இஸ்ரவேலர் வாக்குத்தத்த தேசத்திற்குள் செல்வதற்கு இரண்டாம் வாய்ப்பு கொடுக்கப்பட்டது. அந்தப் பணியை யோசுவா மிகுந்த சிரத்தையுடன் மேற்கொண்டார். யோசுவாவுக்கும் இஸ்ரவேலர்களுக்கும் முன்பாக இருந்ததை முதலில் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும். யோசுவா இரண்டு ஒற்றர்களை கானானுக்கு அனுப்பிவைக்கிறார். அத்தேசத்தின் தற்காப்பு அமைப்பு, இராணுவ ஆயத்த நிலை, நீர் விநியோக அமைப்பு, எதிரிப் படையினரின் வருகையை அங்குள்ளவர்கள் அணுகுகிற மனநிலை ஆகியவைபற்றி முக்கியமான தகவல்களை அவர்கள் கொண்டுவரவேண்டும்.

இஸ்ரவேலருக்கு அத்தேசத்தைக் கொடுப்பதாக தேவன் வாக்குரைத்திருந்தால், இஸ்ரவேலர் எந்த முயற்சியும் எடுக்கவேண்டிய அவசியம் இருக்கவில்லை என்று நினைக்கக்கூடாது. தேவனுடைய உறுதிமொழி, மனிதர்களின் பொறுப்புணர்வுக்கு இடமில்லாமல் செய்வதில்லை. இஸ்ரவேலர் இரண்டாம் முறையாக கானானின் எல்லையில் நின்றுகொண்டிருந்தார்கள். மிகுந்த எதிர்பார்ப்பு நிலவியது; ஆனால் கடந்தமுறை இஸ்ரவேலர் இதே நோக்கத்திற்காக அதன் எல்லையில் நின்றிருந்தபோது, அது மிகப்பெரிய தோல்வியில் முடிவடைந்தது.

இந்த வாரம், யோசுவா புத்தகத்திலிருந்து இரண்டு முக்கியச் சம்பவங்களையும், அதில் இன்று நமக்குள்ள விசுவாசப் பாடத்தையும் ஆராய்வோம். தேவனுடைய கிருபையில் பொதிந்துள்ள முடிவில்லாச் சாத்தியங்கள் நம்மை வியப்பில்தான் ஆழ்த்துகின்றன!

*2025, அக்டோபர் 11 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# இரண்டாம் வாய்ப்பு

**ஒற்றர்களை அனுப்பி, கானான் தேசத்தைப் பிடிக்கிற பணியை யோசுவா தொடங்கியது ஏன்? யோசுவா 2:1; எண் 13:1,2,25–28,33; எண் 14:1–12.**

---

அகாசியா தோப்பு என்றும் அழைக்கப்படுகிற சித்தீம் என்கிற இடத்திலிருந்துதான் அந்த இரண்டு ஒற்றர்களையும் யோசுவா அனுப்பினார். யோசுவா 2:1. சித்தீம் என்கிற பெயர் இஸ்ரவேல் வரலாற்றின் இரண்டு மோசமான சம்பவங்களை நினைவுபடுத்துகிறது.

அதில் ஒன்று, ஒற்றர்கள் சம்பந்தப்பட்டது. எண் 13. அங்கும் ஒற்றர்கள் அனுப்பப்பட்டார்கள். அந்த ஒற்றர்கள் இரகசியமாக எதிரிகளின் பகுதிகளுக்குள் ஊடுருவிச்சென்றார்கள். பிறகு திரும்பி வந்தார்கள். அந்த இடம்குறித்த தகவல்களை அறிக்கையிட்டார்கள். அதன் அடிப்படையில் செயல்பட்டார்கள்.

சித்தீமில் நடந்த மற்றொரு சம்பவம், இஸ்ரவேலர்கள் உடன்படிக்கையை மிகவும் துணிகரமாக, விக்கிரக வழிபாட்டுடன் மீறினதாகும். பிலேயாமின் தூண்டுதலின் பேரில், மோவாபிய பெண்களுடன் ஒழுக்கக்கேடான முறையில் நடந்துகொண்டு அவர்களுடைய கடவுள்களை வணங்கினார்கள். எண் 25:1-3; எண் 31:16. இந்தப் பின்னணிதான், இப்போது நடக்கிற சம்பவமும் எவ்வாறு முடியுமோ என்கிற பதற்றத்தை உண்டாக்குகிறது. அது வாக்குத்தத்த தேசத்தின் எல்லையில் மற்றுமொரு தோல்வி சம்பவமாக முடியுமா? அல்லது நீண்டகாலம் எதிர்பார்க்கப்பட்ட ஆதிகால வாக்குறுதியின் நிறைவேறுதலாக முடியுமா?

**ஒரு தேசமாக இஸ்ரவேலுக்கும், ஒரு தனிப்பட்ட நபராக பேதுருவுக்கும் கொடுக்கப்பட்ட இரண்டாம் வாய்ப்புகளுக்கு இடையே உள்ள ஒற்றுமைகள் என்ன? யோவான் 18:16–18,25–27; 21:15–19.**

---

தேவன் இரண்டாம் வாய்ப்புகளின் (பல வாய்ப்புகளின்) தேவன். அந்த இரண்டாம் வாய்ப்பையும் (பல வாய்ப்புகளையும்தான்) வேதாகமம் ‘கிருபை’ என்று அழைக்கிறது. நாம் பெறத் தகுதியில்லாத ஒன்றைப் பெறுவதே கிருபை.

கிருபைபற்றி வேதாகமம் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறது. ரோமர் 5:2; எபே 2:8; ரோமர் 11:6. மீண்டும் புதிதாகத் தொடங்குவதற்கான வாய்ப்பை தேவன் ஒவ்வொருவருக்கும் கிருபையாக வழங்குகிறார். தீத்து 2:11-14. பேதுரு இந்தக் கிருபையை அனுபவித்தார்; திருச்சபையிடம் கிருபையில் பெருகுமாறு வலியுறுத்தினார். 2பேதுரு 3:18. ஆனால் நமக்கு இரண்டாம் வாய்ப்பையும் தாண்டி பல வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன என்பதே நல்ல செய்தி இல்லையா? அப்படி இல்லாவிட்டால், நம் நிலைமை என்னவாயிருக்கும்?

---

**கானானுக்குள் செல்ல இஸ்ரவேலருக்கு இரண்டாம் வாய்ப்பு வழங்கப்பட்டதையும், பேதுரு தன் ஆண்டவரை மறுதலித்தபிறகு அவருக்கு கிருபை காட்டப்பட்டதையும்குறித்து யோசியுங்கள். கிருபை தேவைப்படுவோருக்கு அதைக் காட்டவேண்டியதின் அவசியம்பற்றி இந்தச் சம்பவங்கள் நமக்கு என்ன கற்றுக்கொடுக்கவேண்டும்?**

# எதிர்பாராத இடங்களில் மதிப்பு

**யோசுவா 2:2–11; எபி 11:31; யாக் 2:25 ராகாபைப்பற்றிச் சொல்லுவது என்ன?**

ராகாபின் சம்பவத்தில், அந்த ஒற்றர்களைப் பாதுகாக்க அவள் பொய் சொன்னாள். அளவுக்கு அதிகமாக பாவத்தில் மூழ்கியிருந்த ஒரு பகுதியில் வாழ்ந்து வந்தாள்; அதனால்தான் அந்த மக்களை தேவன் நியாயந்தீர்க்க வேண்டியதாயிற்று; அந்தச் சூழலில்தான் பொய் சொல்கிறாள். ஆதி 15:16; உபா 9:5; லேவி 18:25-28. புதிய ஏற்பாடு அவளது விசுவாசத்தைப் பாராட்டினாலும்கூட, அவள் செய்ததெல்லாம் சரியென்றோ, அவள் பொய் சொன்னதில் தவறில்லை என்றோ புதிய ஏற்பாடு அவளது செயல்கள்பற்றிக் குறிப்பிடவில்லை.

சீர்கெட்ட கலாச்சாரத்தினருடன் இருப்பதைக் காட்டிலும் அந்த ஒற்றர்களுடன் சேரத் தீர்மானித்தது விசுவாசம் என்று எபிரெயர் 11:31 குறிப்பிடுகிறது. இஸ்ரவேலின் அந்த இரண்டு ஒற்றர்களுக்கும் தங்குவதற்கு இடமளித்து, அவர்கள் பாதுகாப்பாகச் செல்வதற்கான வழிகளைக் காட்டியதை யாக் 2:25 பாராட்டுகிறது. மிகவும் சீர்கேடான கலாச்சாரத்திற்கு மத்தியில், மிகப்பாவமான வாழ்க்கையின் மத்தியில், தேவன் தம் கிருபையால் காப்பாற்றுவதற்கு ராகாபுக்குள் இருந்த ஒரு சிறு விசுவாசப் பொறியைக் கண்டார். தேவனில் விசுவாசத்தை வெளிப்படுத்தியதும், அவரது மக்களுடன் இருப்ப தற்குத் தீர்மானித்ததும்தான் ராகாபிடமிருந்த சிறு நன்மை; அதை தேவன் பயன்படுத்தினார்; மாறாக, அவள் செய்ததெல்லாம் சரியெனப் பாராட்டவில்லை. ராகாப் மிகுந்த தைரியத்தோடும் விசுவாசத்தோடும், இரட்சிப்புக்கான ஏதுகரமாகவும் செயல்பட்டாள், இஸ்ரவேலின் தேவனைத் தெரிந்துகொண்டாள், அவற்றை தேவன் அவளிடம் மதிப்புமிக்கவையாகக் கண்டார்.

'உங்கள் தேவனாகிய கர்த்தரே உயர வானத்திலும் கீழே பூமியிலும் தேவனானவர்' என்று சொன்னாள். யோசுவா 2:11. ராகாப் ஒரு கானானிய பெண், அவளது அஞ்ஞான மார்க்கத்தில் வானுலக தெய்வங்கள் என அவர்கள் கருதின கடவுள்களிடம் தான் பிரார்த்தனை செய்வார்கள், அந்நிலையில் யெகோவாதான் ஒரே தெய்வம் என்று அவள் அறிக்கையிட்டது குறிப்பிடத்தக்கது.

ராகாப் சொன்ன வார்த்தைகள் இதற்குமுன், தொழுகை தேவனுக்குமட்டுமே உரியது என்று சொல்லப்படுகிற இடங்களில்தான் வருகின்றன. யாத் 20:4; உபா 4:39; உபா 5:8. இஸ்ரவேலரின் தேவன்தாம் மெய்யான ஒரே தேவன் என்று அவள் யோசித்து, மனதாரத் தீர்மானித்திருந்ததை அவளது வார்த்தைகள் காட்டுகின்றன. தேவனே சர்வத்திற்கும் அரசர், அதன்பேரில்தான் எரிகோவுக்கு தீர்ப்பு வழங்கப்பட்டது என்பதைப் புரிந்திருந்ததை அவளது வார்த்தைகள் காட்டின.

இரண்டே இரண்டு சாத்தியங்களின் அடிப்படையில் யெகோவா நியாயந்தீர்ப்பதை அறிந்திருந்தாள்; ஒன்று, அவருக்கு எதிராக தொடர்ந்து கலகத்தில் நீடித்தால் அழிவு அல்லது விசுவாசத்துடன் அவரிடம் சரணடைந்தால் வாழ்க்கை; இதை உணர்ந்தவளாக தார்மீகத்தீர்மானம் செய்தாள். இஸ்ரவேலரின் தேவனைத் தெரிந்துகொண்டதின் நிமித்தம், எரிகோ குடிகள் அனைவரும் இஸ்ரவேலரின் தேவனிடம் திரும்பி, இரக்கம் வேண்டியிருந்தால், அவர்களது முடிவு என்னவாயிருக்கும் என்பதற்கு ராகாப் உதாரணமானாள்.

---

**இறுதி மெய்ப்பற்று தேவன்மீதுமட்டுமே இருக்கவேண்டியதுபற்றி இந்தச் சம்பவம் கற்பிப்பது என்ன?**

# புதிய பற்று

**அந்த ஒற்றர்களுக்கும் ராகாபுக்கும் இடையே நிகழ்ந்த உடன்பாட்டைப் புரிந்து கொள்ள யாத் 12:13,22,23 எவ்வாறு உதவுகிறது? யோசுவா 2:12-21.**

ஜீவனுக்காக ஜீவன், இரக்கத்திற்காக இரக்கம் என்று ராகாப் பேசுகிறாள். தயவு என்று யோசுவா 2:12இல் வருகிற வார்த்தைக்கான எபிரெயச் சொல் *கெஸெட்*; இது அர்த்தம் பொதிந்தது; ஒரே வார்த்தையில் அர்த்தம் கூறமுடியாது. முதற்கண், உடன்படிக்கை நேர்மையை அது சுட்டிக்காட்டுகிறது. மேலும் உண்மைத்தன்மை, இரக்கம், கருணை, உபகாரம் உள்ளிட்ட கருத்துகளும் அடங்கியுள்ளன.

ராகாபின் வார்த்தைகள் உபா 7:12இன் வார்த்தைகளையும் ஞாபகப்படுத்துகின்றன; அங்கு யெகோவாதாமே இஸ்ரவேலர்மீதான தம் *கெஸெட்* நிலைத்திருக்குமென ஆணையிட்டார்: 'இந்த நியாயங்களை நீங்கள் கேட்டு, கைக்கொண்டு, அவைகளின்படி செய்வீர்களானால், அப்பொழுது உன் தேவனாகிய கர்த்தர் உன் பிதாக்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்த உடன்படிக்கையையும் கிருபையையும் (*கெஸெட்*) உனக்காகக் காப்பேன்' உபா 7:12.

அதே அதிகாரத்தில்தான் (உபா 7) கானானியர்களுக்கு தடை (*செரம்*) போடப்படுகிறது. அந்தத் தடையின்கீழ் இருந்த கானானியப் பெண் ராகாப்; ஆனாலும் தனக்குள் துளிர்த்த விசுவாசத்தால், இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்டிருந்த வாக்குறுதிகளை உரிமைகோருகிறாள். அதன் விளைவாக, இரட்சிக்கப்பட்டாள். அந்த ஒற்றர்களுக்கும் ராகாபுக்கும் இடையே நடைபெற்ற உரையாடலிலிருந்து ஞாபகத்திற்கு வருகிற முதல் விஷயம், யாத்திரை அனுபவத்தின் பஸ்கா ஆசரிப்பாகும். அங்கே, இஸ்ரவேலர்கள் பாதுகாக்கப்பட அவர்கள் தங்கள் வீடுகளுக்குள் இருப்பதும், பலியிடப்பட்ட ஆட்டுக்குட்டியின் இரத்தத்தை வீட்டு வாசலின் நிலைக்கால்களிலும் மேல்சட்டத்திலும் தெளிப்பதும் அவசியமாக இருந்தது.

'நீங்கள் இருக்கும் வீடுகளில் அந்த இரத்தம் உங்களுக்காக அடையாளமாய் இருக்கும்; அந்த இரத்தத்தை நான் கண்டு, உங்களைக் கடந்துபோவேன்; நான் எகிப்துதேசத்தை அழிக்கும்போது, அழிக்கும் வாதை உங்களுக்குள்ளே வராதிருக்கும்.' யாத் 12:13; யாத் 12:22,23.

'ஜனங்கள் கீழ்ப்படிந்து, தங்கள் விசுவாசத்தை நிரூபிக்க வேண்டியிருந்தது. இவ்வாறு கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் புண்ணியங்களால் இரட்சிக்கப்பட விரும்புகிற அனைவரும் தாங்கள் இரட்சிப்படைவதற்கு தங்கள் பங்கிற்குச் செய்ய வேண்டிய ஒன்று இருப்பதை உணரவேண்டும். மீறுதலின் தண்டனையிலிருந்து கிறிஸ்துமட்டுமே நம்மை மீட்கமுடியும் என்றாலும், நாம் பாவத்தை விட்டுவிட்டு கீழ்ப்படிதலுக்குத் திரும்பவேண்டும். மனிதன் கிரியைகளால் அல்ல, விசுவாசத்தால் இரட்சிக்கப்படவேண்டும்; ஆனாலும் அவனது விசுவாசம் அவனது கிரியைகளில் வெளிப்படவேண்டும்'.

அவர்களை தேவதூதனின் அழிவிலிருந்து காப்பாற்றிய அடையாளம் இரத்தம். எகிப்தின் கடைசி வாதையின்போது இஸ்ரவேலருடைய உயிரை தேவன் காப்பாற்றியதுபோல, எரிகோ அழிக்கப்படும்போது அந்த இஸ்ரவேலர்கள் ராகாபையும் அவளது குடும்பத்தையும் காப்பாற்ற வேண்டியிருந்தது.

---

**இந்த இரண்டு சம்பவங்களிலும் வெளிப்படுகிற வல்லமையான சுவிசேஷச் செய்தி என்ன? அவற்றிலிருந்து நாம் என்ன சுவிசேஷப் பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம்?**

# முரண்பட்ட விழுமியங்கள்

**ராகாபின் அனுபவத்திற்கும், கிபியோனியர்களின் அனுபவத்திற்கும் இடையே உள்ள ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் என்ன? அவை ஏன் அர்த்தமிக்க பாடங்கள் நிறைந்தவை? யோசுவா 9:1-20.**

சிறுசிறு மாகாணங்களை ஆண்டுவந்த கானானிய ராஜாக்கள் இஸ்ரவேலர்களுக்கு எதிராக கூட்டணிப் படைகளை உருவாக்கியதாகச் சொல்லி யோசுவா 9 துவங்குகிறது. மாறாக கிபியோன் பட்டணவாசிகள், இஸ்ரவேலுடன் ஒரு உடன்படிக்கைபண்ணத் தீர்மானித்தார்கள். இஸ்ரவேலர்களை தந்திரமாக ஏமாற்றி தங்களுடன் உடன்படிக்கைபண்ண வைக்க, தூரதேசத்திலிருந்து வருகிற தூதுவர்கள்போலக் காட்டிக்கொண்டார்கள். உபா 20:10-18இல், கானானியர்களுக்கு என்ன செய்யவேண்டும், வாக்குத்தத்த தேசத்திற்கு வெளியே வாழ்ந்தவர்களை என்ன செய்யவேண்டும் என்று தேவன் குறிப்பிட்டுச் சொல்லியிருந்தார்.

'தந்திரமாக' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையை, விவேகமும் ஞானமுமாக என்று நேர்மறை அர்த்தத்துடனும் பயன்படுத்தலாம். நீதி 1:4; 8:5,12. அல்லது, குற்றநோக்கத்துடன் என்கிற அர்த்தத்திலும் பயன்படுத்தலாம். யாத் 21:14, 1சாமு 23:22, சங் 83:3. கிபியோனியர்களுடைய விஷயத்தில், அவர்களது துரோகச்செயல்களுக்கு பின்னால், தங்களைப் பாதுகாக்கிற நோக்கம்தான் இருந்தது; இஸ்ரவேலருக்கு கேடுசெய்கிற நோக்கம் இல்லை.

கிபியோனியர்களுடைய பேச்சு கிட்டத்தட்ட ராகாபின் பேச்சுபோலவே இருந்தது. இருவருமே இஸ்ரவேலின் தேவனுடைய வல்லமையை அங்கீகரித்தார்கள்; மனிதமுயற்சியால் இஸ்ரவேலர் வெற்றிபெறவில்லை என்பதை ஒத்துக்கொண்டார்கள். மற்ற கானானியர்களைப்போல இஸ்ரவேலருக்கு அத்தேசத்தைக் கொடுக்கும் யாவேயின் திட்டத்திற்கு எதிராகக் கலகம்செய்யவில்லை; தேவன்தாமே பிறத் தேசத்தாரையெல்லாம் இஸ்ரவேலருக்கு முன்பாகத் துரத்தியதை ஒத்துக்கொண்டார்கள். எகிப்திலிருந்து விடுவிக்கப்பட்ட செய்தியும், சீகோன், ஓகு ஆகிய ராஜாக்களுக்கு எதிராக வெற்றிபெற்ற செய்தியும்தான் ராகாபையும் கிபியோனியர்களையும் இஸ்ரவேலர்களுடன் கூட்டணி வைக்க நாடச்செய்தது. ஆனால் ராகாபைப்போல இஸ்ரவேலின் தேவனுக்கு முற்றிலும் தங்களை அர்ப்பணிக்க விரும்புவதற்குபதிலாக, சூழ்ச்சியால் அதை நிறைவேற்ற விரும்பினார்கள்.

இதுபோல தேவ சித்தத்தை அறிய விரும்புகிறவர்களுக்கு மோசேயின் பிரமாணத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எண் 27:16-21. யோசுவா கர்த்தருடைய சித்தத்தைக் கேட்டு, கிபியோனியர்களின் வஞ்சகத்திலிருந்து தங்களைத் தப்புவித்திருக்கவேண்டும். தேவன் நியமித்த ஒரு தலைவரின் அல்லது ஒரு கிறிஸ்தவத் தலைவரின் அடிப்படை கடமை தேவ சித்தத்தை நாடுவது. 1 நாளா 28:9; 2நாளா 15:2; 18:4; 20:4. அதைப் புறக்கணித்ததால், இஸ்ரவேலர் ஒன்று அத்தேசத்தைக் கைப்பற்றுவதற்கான அடிப்படை நிபந்தனைகளை மீறவேண்டிய அல்லது கர்த்தருடைய நாமத்தில் செய்திருந்த ஒரு ஆணையை மீறவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்; இரண்டுமே ஆபத்தானதுதான்.

---

**இரண்டு முரண்பட்ட வேதாகம விழுமியங்களுக்கு இடையே எப்போதெல்லாம் பெரும் போராட்டத்தைச் சந்தித்திருக்கிறீர்கள்?**

# ஆச்சரியமளிக்கிற கிருபை

**யோசுவா எடுத்த தீர்மானம் எவ்வாறு நீதியும் கிருபையும் கலந்ததாக இருந்தது? யோசுவா 9:21-27.**

இஸ்ரவேல் மக்கள் கிபியோனியர்களைத் தாக்க விரும்பியிருக்கலாம்; ஆனால் அதற்கு அவர்கள் அனுமதிக்கப்படவில்லை; ஏனென்றால், இஸ்ரவேல் சபையாரின் தலைவர்கள் அவர்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்திருந்தார்கள். தவறான செயலோ குற்றநோக்கமோ சம்பந்தப்படாத ஒரு பொருத்தனையை, அது ஒருவரை தனிப்பட்ட விதத்தில் பாதித்தாலும்கூட நிறைவேற்றிவிட வேண்டும் என்கிற நியதியின் அடிப்படையில் இஸ்ரவேலின் தலைவர்கள் செயல்பட்டார்கள். நியா 11:29-40.

பழைய ஏற்பாட்டில், ஒரு பொருத்தனையைச் செய்வதற்குமுன் நிதானமாக யோசிப்பதும், செய்த பொருத்தனையை நிறைவேற்றுவதும் பக்தியின் நற்பண்புகளாகப் பார்க்கப்பட்டன. சங் 15:4; சங் 24:4; பிர 5:2,6. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தில் பொருத்தனை செய்வதால், தலைவர்கள் அதை மாற்றமுடியாது. இஸ்ரவேலின் தலைவர்கள் தேவன்பேரில் செய்த அந்த பொருத்தனையால், இஸ்ரவேலரின் முடிவு கிபியோனியர்களுடைய முடிவுடன் பிரிக்கமுடியாத விதத்தில் இணைக்கப்பட்டிருந்தது. தேவனுடைய வீட்டாருக்கு விறகு வெட்டுகிறவர்கள், தண்ணீர் சுமக்கிறவர்கள் என்கிற பணி கொடுக்கப்பட்டாலும், இஸ்ரவேலின் ஆராதனை சமூகத்துடன் பிரிக்கமுடியாத ஓர் அங்கமாக கிபியோனியர்கள் மாறினார்கள். யோசுவா 9:23. 'சபையார் எல்லாருக்கும்' வேலைக்காரர்களாக இருக்கட்டும் என்று இஸ்ரவேலின் தலைவர்கள் தீர்ப்பளிக்க (யோசுவா 9:21), அதற்கு யோசுவா சொன்ன பதில், அந்தச் சாபத்தை கிபியோனியர்களுக்கு ஓர் ஆசீர்வாதமாக மாற்றியது. 2சாமு 6:11.

கிபியோனியர்கள் மார்க்கரீதியாக அதிகபட்ச சிலாக்கியங்களை அனுபவித்ததாக வரலாறு சொல்கிறது; தேவ மக்களுக்கு உண்மையுள்ளவர்களாகவும் இருந்தார்கள். இஸ்ரவேலர் தாங்கள் கொடுத்த ஆணையை தலைமுறை தோறும் காப்பாற்றினார்கள்; அதனால், பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து திரும்பிய போது, எருசலேமைத் திரும்பக் கட்டுவதற்கு கிபியோனியர்களும் உதவினார்கள். நெகே 7:25. அவர்களது செயல்கள் நித்தியமான நல்ல விளைவுகளை உள்ளடக்கியிருந்தது; அதற்கு காரணம் தேவ கிருபையே.

கிபியோனியர்கள் உண்மையைக் கூறி, ராகாபைப்போல இரக்கம் வேண்டியிருந்தால் என்ன நடந்திருக்கும்? நமக்குத் தெரியாது; ஆனால், தேவசித்தம் என்னவென்று விசாரித்திருந்தாலும், அழிவிலிருந்து தப்புவிக்கப்பட்டிருப்பார்கள் என்பதை மறுக்கமுடியாது. தேவனுடைய இறுதி நோக்கம் பாவிகளை அழிப்பது அல்ல, அவர்கள் மனந்திரும்புவதைக் காண்பதும், அவர்களுக்கு தம் கிருபையை அருளுவதும்தான். எசே 18:23; 33:11. கிபியோனியர்களின் சூழ்ச்சியை தேவ இரக்கம், உபகரணம், நீதியான குணம்மீதான வேண்டுதலாகப் பார்க்க வேண்டும். கானானியர்கள் மனந்திரும்ப மறுத்ததும், தேவ நோக்கத்திற்கு எதிர்த்து நின்றதும்தான் அவர்களை முற்றிலும் அழிக்கிற தீர்மானத்திற்கு வழி நடத்தியது. ஆதி 15:16. ஆனால் கிபியோனியர்கள் தேவ மகத்துவத்தை அங்கீகரித்ததையும், கலகம்செய்வதற்கு பதிலாக சமாதானத்தை விரும்பியதையும், சிலைவழிபாட்டை விட்டுவிட்டு மெய்யான ஒரே தேவனை வணங்க சித்தங்கொண்டதையும் தேவன் கனப்படுத்தினார்.

# மேலும் படிக்க:

ராகாப் மற்றும் ஒற்றர்கள்பற்றிய சம்பவத்திற்கு பிறகு, ராகாபைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை; பின்னர் இயேசுவின் வம்சவரலாற்றில்தான் அவளது பெயர் வருகிறது. அவள் யூதா கோத்திரத்தைச் சேர்ந்த சல்மோன் என்பவரை விவாகம்பண்ணி, போவாவாஸைப் பெற்றாள்; மேலும் அதே வம்சவரலாற்றில் வருகிற பிரபலமான ஒரு பெண்மணியின் மாமியாரானார்; அந்தப் பெண்மணி ரூத். மத் 1:5; ஒப்பிடவும் ரூத் 4:13,21. முற்றிலும் அழிக்கப்படுவதற்கு நியமிக்கப்பட்ட எரிகோவைச் சேர்ந்த வேசியான ஒரு பெண், தாவீதின் அரச வம்சத்தில் ஒரு முக்கியப் பெண்ணாக, மேசியா பிறக்கவிருந்த வம்சத்தில் ஒருவளாக மாறினாள். விசுவாசம் கடுகு அளவே இருந்தாலும், அதன் மூலம் தேவன் இப்படிப்பட்ட ஒரு மாற்றத்தை உண்டாக்க முடியும். மத் 17:20; லூக் 17:6.

'தம் அதிகாரத்தை அங்கீகரித்த விக்கிரக வழிபாட்டுக்காரர்கள்மீது தேவன் இரக்கம் காட்டின சம்பவம் அவளது (ராகாபின்) மனமாற்ற சம்பவம் மட்டுமே கிடையாது. அத்தேசத்தில் பலர் – கிபியோனியர்களும் – தங்கள் அஞ்ஞான மார்க்கத்தைத் துறந்து, இஸ்ரவேலருடன் இணைந்து, உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களில் பங்கெடுத்தார்கள்.

'தேசம், பாலினம், இனம்ரீதியாக தேவன் எந்தப் பாகுபாடும் பார்ப்பதில்லை. அவரே சகல மனிதர்களையும் சிருஷ்டித்தவர். சிருஷ்டிப்பின் அடிப்படையில் அனைவரும் ஒரே குடும்பம், மீட்பின் அடிப்படையில் அனைவரும் சமம். ஒவ்வோர் ஆத்துமாவும் தங்குதடையின்றி தேவனிடம் செல்வதற்கு, பிரிவினையின் சுவர் ஒவ்வொன்றையும் தகர்த்து, தேவாலயப் பிரகாரங்களின் ஒவ்வொரு அறையையும் திறப்பதற்கு கிறிஸ்து வந்தார். தேவ அன்பு ஒவ்வொரு இடமும் ஊடுருவிச் செல்கிற அளவுக்கு மிகவிசாலமானது, அதிக ஆழமானது, முற்றிலும் நிறைவானது. அது சாத்தானின் வஞ்சகங்களால் வஞ்சிக்கப்பட்டவர்களை அவனது செல்வாக்கிலிருந்து தூக்கி, வாக்குத்தத்தத்தின் வில் சூழ்ந்திருக்கிற சிங்காசனமான தேவ சிங்காசனத்திற்கு அருகில் வைக்கிறது. கிறிஸ்துவுக்குள் யூதனென்றும் கிரேக்கனென்றும் இல்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றும் இல்லை'.

## கலந்துரையாடக் கேள்விகள்

1. *'இரண்டாம் வாய்ப்புகள்' பற்றித் தியானியுங்கள். நாம் எவ்வாறு மற்றவர்களுக்கு இரண்டாம் வாய்ப்புகளை வழங்கவேண்டும்? அதே நேரம், இந்தக் கருத்தை எவ்வாறு தவறாகப் பயன்படுத்தாமல் இருக்கலாம்? உதாரணமாக, வன்முறை உறவில் அல்லல்படுகிற ஒரு பெண்ணிடம் மீண்டும் அந்த உறவில் நீடிக்கும்படி ('கிருபை') ஆலோசனை வழங்குவது, அந்த வன்முறை தொடரவே வழிநடத்தும் அல்லவா? இங்கே ஒரு சமநிலைப் போக்கை எவ்வாறு கடைப்பிடிக்கலாம்?*

2. *ராகாப் எவ்வாறு விசுவாசத்திற்கு ஒரு முன்மாதிரியாக இருக்கிறாள்? வேதாகம இலட்சியங்களுக்கு ஒத்துப்போகாத வாழ்க்கைமுறை உள்ளவர்கள்கூட தேவனை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இருக்கக்கூடும் என்பதை எவ்வாறு புரிந்துகொள்ளலாம்? அவர்களது செயல்பாடுகள் சிலவற்றைக் குறைகூறாமல் எவ்வாறு அவர்களது விசுவாசத்தை மதிக்கலாம்?*

3. *கிபியோனியர்களாலும், தேவனிடம் ஆலோசனைகேட்காததாலும் உண்டான வேதனையைப் போக்குவதற்கு நீதியும் கிருபையும் கலந்த நடைமுறைரீதியான ஒரு தீர்வுக்கு யோசுவாவால் வரமுடிந்தது. உங்கள் வாழ்க்கையில் நீதியும் கிருபையும் கலந்த ஒரு தீர்வுபற்றி யோசியுங்கள். இரண்டையும் கலந்து வழங்குவதற்கான சில நடைமுறை வழிகள் என்ன?*

# ‘கவலைப்படாதே, தேவன் உதவிசெய்வார்’

**ஆண்ட்ரூ மெக்செஸ்னீ**

பிரேசிலில் செவந்த்–டே அட்வென்ட்டிஸ்ட் புத்தகங்களை வழங்கிவந்த இனாசியோ மனோவேல், ஒரு வீட்டின் கதவைத் தட்டினார்; கதவைத் திறந்த ஒரு பெண்மணி, “எனக்கு கிறிஸ்தவர்களைப் பிடிக்காது” என்று கோபத்துடன் கத்தினார். இனாசியோ திகைத்துப் போனார். புத்தக ஊழியராக அன்றுதான் முதல் நாள் சென்றிருந்தார், தான் சந்தித்த முதல் வீட்டிலேயே அந்த அனுபவத்தைப் பெற்றார்.

அவரும் அவரது நண்பரும் அடுத்த வீட்டிற்குச் சென்றார்கள். வீட்டு முற்றத்திலிருந்து ஒரு பெரிய நாய் பயங்கரமாகக் குரைத்தது. முதல் வீட்டில் ஒரு பெண் குரைத்தார். இப்போது நாய் குரைக்கிறது என்று நண்பன் முணுமுணுத்தான்.

“கவலைப்படாதே, தேவன் நம்மோடு இருக்கிறார்” என்று இனாசியோ சொன்னார்.


ஒரு பெண் வெளியே வந்து, அந்த நாயை தூரே அழைத்துச் சென்றார். பிறகு, இனாசியோவையும் அவரது நண்பரையும் உள்ளே வரும்படி கூறினார். மூவரும் மனம்விட்டுப் பேசினார்கள். தன் கணவர் சிறைக்குச் சென்றபிறகு தான் பட்ட கஷ்டங்களை எல்லாம் அந்தப் பெண் கூறினார். அடுத்த ஓய்வுநாளில், அந்தப் பெண் தன் மூன்று பிள்ளைகளுடன் ஆலயத்திற்கு வந்தார். இனாசியோவுக்கு ஆச்சரியமாக இருந்தது. தன் வாழ்நாள் முழுவதும் மக்களை தேவனிடம் வழிநடத்த விரும்புவதாக ஜெபித்தார்.

ஆனால் முதல்நாள் வேலையில், தாங்கள் சந்தித்த மூன்றாவது வீட்டில்தான் அவருக்கு மிகப்பெரிய ஆச்சரியம் காத்திருந்தது. அங்கே வசித்து வந்த எடிலுசா என்கிற பெண்மணி, ஞாயிற்றுக்கிழமை மதியங்களில் வேத ஆராய்ச்சி வகுப்புகளுக்கு வருவதற்குச் சம்மதித்தார். வாராவாரம் கலந்துகொண்டார், பிறகு, ஏழாம் நாள் ஓய்வுநாள்குறித்த சத்தியத்தை அறிந்தார். எடிலுசா நகஅழகு நிபுணர், வீட்டுவேலைகளும் செய்துவந்தார், அதனால் சனிக்கிழமைகளில் விடுமுறை எடுக்க முடியாது.

“அன்றுதான் எனக்கு அதிக பணம் கிடைக்கும், நான் என்ன செய்வது?” என்று கேட்டார். “கவலை வேண்டாம், தேவன் உதவிசெய்வார். உங்களைக்குறித்து சிறந்த திட்டம் வைத்திருக்கிறார்” என்று சொன்னார்.

அடுத்தமுறை வேத ஆராய்ச்சி வகுப்புக்கு வந்தபோது, தெருவில் புதிதாக ஒருவரைச் சந்தித்ததாகவும், அவர் ஓய்வுநாளில் விடுமுறை அளித்து, வீட்டு வேலைசெய்ய தன்னை அழைத்ததாகவும் எடிலுசா கூறினார்.

அந்தச் சம்பத்தை மிகுந்த மகிழ்ச்சியுடன் இனாசியோவிடம் பகிர்ந்தார். “முன்பு நான் பார்த்த வேலையைவிட இப்போது மூன்று மடங்கு அதிக சம்பளம் கிடைத்தது” என்றார்.



எடிலுசா ஞானஸ்நானம் பெற்றார். பிறகு, அவரது குடும்பத்தினரும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார்கள். இனாசியோவுக்கு இப்போது 68 வயதாகிறது. கடந்த 36 வருடங்களாக வருடந்தோறும் 4–11 பேரை தேவனிடம்வழிநடத்தியிருக்கிறார். தான் செல்கிற எல்லா இடங்களுக்கும் தன்னுடன் வேதப்பாடங்களைக் கொண்டுசெல்வார். தினமும் இரவில், ‘ஆண்டவரே, நான் உமது அன்பைப் பகரும்படி யாரையாவது சந்திக்க உதவிசெய்யும்’ என்று ஜெபிப்பார்.